ஆனால் தொடர்ந்து அரசு அரசியல் கட்சி சார்புடையவர்களை, அதிகாரிகள் அல்லாதவர்களை இப்படிப்பட்ட பணிக்கு அங்கே ஈடுபடுத்துவதன் மூலமாக அவர்கள் எந்தக் காரியத்தையும் அங்கே இந்த அரசின் சார்பாகச் செய்யாத ஒரு சூழ்நிலையில் இலட்சக்கணக்கான ரூபாய்—இதுவரையில் அந்தக் கணக்கு தரப்படவில்லை—அந்த அளவிற்கு அரசுப் பிரதிநிதி என்கின்ற பெயரால் செலவழிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட வீண் செலவுகளைக் குறைத்தும், வரவேண்டிய வருவாய்களை ஒழுங்காகக் கவனித்து அவைகளைப் பெறுகின்ற முயற்சியிலே ஈடுபட்டு இந்த அரசு இயங்குமேயானால் இப்படிப்பட்ட வரிகளைப் போட வேண்டிய அவசியமே இல்லை. எனவேதான் இதையொரு ஆய்வுக் குழுவிற்கு, பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டுமென்றுகூட நம்முடைய நண்பர்கள் திரு. சித்தன் அவர்களும் மற்றும் பலகட்சிகளைச் சேர்ந்தவர்களும், எனக்கு முன்னால் பேசிய திரு. சங்கரய்யா அவர்களும், நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்களும் இங்கே சுட்டிக்காட்டினார்கள்.

இது பொறுக்குக் குழுவிற்கு விடப்படும் என்றால், அந்தக் காலதாமதத்தினால் பல்வேறு காரியங்கள் தவறாகக்கூட நடைபெறக்கூடும். பொறுக்குக் குழுவிற்கு அதை விடலாம் என்றால் கூட இதனுடைய அடிப்படையை நாம் ஏற்றுக்கொண்டதாக அர்த்தம், எனவே, இந்த அடிப்படையையே தகர்த்தெறிகின்ற அளவிற்கு இந்த நுழைவு வரியைத் தமிழகத்திலே நுழைய விடாமல் தடுக்க வேண்டுமென்கின்ற முறையோடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த வரிவிதிப்பை மீண்டும் மீண்டும் வன்மையாகக் கண்டித்து, இதைத் திரும்பப் பெறுவதே உசிதமான வழி என்று வருவாய்த் துறை அமைச்சருக்கும், இந்த அரசுக்கும் அறிவித்து அமைகின்றேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த நுழைவு வரியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். கருத்துக்களைச் சொல்கிறபொழுது, புதிதாக நம்முடைய மாநிலத்திலே வந்திருக்கிறது என்பதனாலேயே மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், வெளியே இருக்கின்ற வியாபாரிகள் புதிதாக ஒரு வரி வருகிறது; புதிதாக வருவதை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்திவிட வேண்டுமென்றும், ஆகவே தங்களுடைய பலத்தையெல்லாம் ஒன்றாகத் திரட்டிக் காண்பித்து, அதை மக்களிடத்திலே சொல்வது மட்டுமல்ல, செய்தித் தாள் மூலமாகவும் விளம்பரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.